12.09.2025
MCOP.52/2024
<u>ம.சா.1. 2ம் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

வயது, வருமானம் ஆகியவற்றை குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகிறேன். நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவது மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு மருத்துவமனையில் கொடுக்கப்பட்டுள்ள சான்றிதழில் சாதாரண காயம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பொதுவாக சாலையில் அமர்ந்து டீ குடிப்பது தவறு என்று சொன்னால் சம்பவ நாளில் நான் சாலையின் ஓரமாக உட்கார்ந்து தான் டீ சாப்பிட்டு கொண்டிருந்தேன். சாலையில் எவ்வித அனுமதியும் இல்லாமல் நெல் காய வைப்பது தவறு என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது, ஓட்டுநர் சாலை விதிகளை பின்பற்றி வாகனத்தை இயக்கியதால் காப்பீடு செய்யப்பட்ட 2ம் எதிர்மனுதாரரை பொறுத்தமட்டில் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எலும்பு முறிவு, கொடுங்காயம் ஏற்பட்டதற்கான எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை

என்று சொன்னால் சரிதான்.

**<u>மறுவிசாரணை:–இல்லை.</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.